# DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

## SC.No.86/2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 16 | நாள் | : | 03.07.2025 |
| பெயர் | : | சீதாலட்சுமி | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 03rd day of July 2025.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பேராசிரியராக சட்டம் சார்ந்த மருத்துவதுறையில் பணியாற்றி வருகிறேன். கடந்த 24.10.2017 அன்று திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரியில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் மூத்த உதவி பேராசிரியராக பணிபுரிந்தபோது வாசுதேவநல்லூர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் காவல் நிலைய கு.எண்.247/2017 வழக்கின் சம்பந்தப்பட்ட 23 வயதுடைய இரஞ்சித் என்ற இரஞ்சித் குமார் என்ற ஆண் சடலத்தை சடலக் கூராய்வு செய்து தருமாறு அளித்த விண்ணப்பத்தினை அன்றைய தினம் காலை 11.40 மணியளவில் பெற்றுக் கொண்டு அந்த சடலத்தை காவலர் வெங்கடேஷ் அடையாளம் காட்டிய பின்னர் பிரேத பரிசோதனையை 11.50

மணியளவில் தொடங்கினேன். உடலின் மீது மரண விரைப்பு தன்மை உடல் முழுவதும் காணப்பட்டது. பிரேதம் சீரான உடல்வாகு கொண்டதாக காணப்பட்டது. கைகளிலும், கால்களிலும் நகம் நீல நிறத்துடன் காணப்பட்டது. இறப்பிற்கு முன்பு ஏற்பட்ட காயங்கள் பின்வருமாறு

இடது பக்க மார்பகத்தில் மார்பக கூட்டில் உள்ள நீர் வெளியேற்றப்படுவதற்காக உண்டான காயம் காணப்பட்டது.

**<u>தையலிடப்பட்ட காயங்கள் பின்வருமாறு</u>**

1) 15x1x கழுத்து குறுக்கு எலும்பு ஆலம் வரையிலான ஒரு காயம் கழுத்தின் மேல்பகுதியின் பின்புறத்தில் காணப்பட்டது. அக்காயம் வலது காதுக்கு 5 செ.மீ. பின்வழியாக துவங்கி இடது காதில் 3 செ.மீ. பின் வரை நீண்டு இருந்தது. அதனடியில் இருந்த தசை நார்கள், இரத்த நாளாங்கள், மற்றும் கழுத்து குறுக்கு எலும்பு வெட்டப்பட்ட நிலையிலும் மற்றும் அதனடியில் இருந்த தண்டுவடம் கன்றிய நிலையில் காணப்பட்டது.

2) 9x1 செ.மீ. எலும்பு ஆழம் அளவிலான இடது பக்க தலையின் மேல்பக்கம் மற்றும் பின்பக்கம் காணப்பட்டது அக்காயம் முதலாவது காயத்திற்கு 5 செ.மீ. கீழே காணப்பட்டது. அதன் அடியில் உள்ள தசைகள், இரத்த நாளங்கள் எலும்புகள் வெட்டப்பட்டிருந்தது.

3) 6x1x எலும்பு ஆழம் அளவிலான காயம் உச்சந்தலையில் காணப்பட்டது. அந்த காயம் மூக்கிற்கு 10 செ.மீ.மேலாகவும், இடது காதுக்கு 13 செ.மீ. மேலாகவும்

காணப்பட்டது. அதன் அடியில் உள்ள தசைகள், இரத்த நாளங்கள் எலும்புகள் வெட்டப்பட்டிருந்தது.

4) 12x1x செ.மீ. எலும்பு ஆழம் என்ற அளவில் இடது தோள்பட்டையில் மேல் புறத்தில் ஒரு காயம் காணப்பட்டது. அதன் அடியில் உள்ள தசைகள், இரத்த நாளங்கள் எலும்புகள் வெட்டப்பட்டிருந்தது.

5) முதுகின் மேல்புறத்தின் நடுவில் 3x1x 0.5 செ.மீ. அளவிலான ஒரு காயம் காணப்பட்டது.

6) 4x1x0.5 செ.மீ. அளவிலான ஒரு காயம் வலது கால் முட்டில் காணப்பட்டது.

**<u>சீராய்ப்பு காயங்கள்</u>**

3x2 செ.மீ. அளவில் வலது பக்க தலையின் மேல்புறத்தில் ஒரு காயமும், 2x2 செ.மீ. இடது காலிலும், 1x0.5 செ.மீ. இடது கை முட்டிலும், 1x0.5 செ.மீ. 1x0.5 செ.மீ. அளவில் இடது கையிலும் காணப்பட்டன.

**<u>தலைப்பகுதியை கூராய்வு செய்து பார்த்தபோது காணப்பட்ட காயங்கள்</u>**

தலையின் முன்பகுதி மற்றும் மேல் பகுதியின் நடுப்பகுதியில் காணப்பட்ட ஜவ்வு பகுதிக்கு அடியில் 10x8x0.5 செ.மீ. அளவில் ஒரு கன்றிய காயமும், தலையின் பின்பகுதியில் ஜவ்வு பகுதிக்கு அடியில் 12x7x0.5 செ.மீ. அளவில் கன்றிய காயம் காணப்பட்டது.

**<u>இதர கண்டறிவுகள்</u>**

நாவாடி எலும்பு சீராக இருந்தது. இரைப்பையில் 100 மி.லி.யில் பழுப்பு நிற திரவமும் அதில் எவ்வித வாடையில்லாமலும் அதன் உட்புறத்தோள் சீராகவும் காணப்பட்டது. சிறுகுடலில் 20 மி.லி. பழுப்பு நிற திரவமும் அதில் எவ்வித வாடையில்லாமலும் அதன் உட்புறத்தோள் சீராகவும் காணப்பட்டது. நுரையீரல்,

கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகங்கள் சீராகவும் அதன் குறுக்கு வெட்டுத் தோற்றம் சிவந்த நிறத்திலும் காணப்பட்டது. சிறுநீர்ப்பையில் 10 மி.லி. சிறுநீர் காணப்பட்டது.

**எனது கருத்துரை**

மேற்கண்ட நபர் தலை மற்றும் கழுத்து பகுதியில் ஏற்பட்ட பல்வேறு பலத்த வெட்டுக்காயங்களால் உண்டான விளைவுகளால் இறந்திருக்கக் கூடும் என்று கருத்து வழங்கினேன். வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.10 ஆகும். நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.11 ஆகும். இன்று நீதிமன்றத்தில் காட்டப்படும் அரிவாள் மூலம் மேற்கண்ட காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் எதிர் திசையில் இருக்கக்கூடிய நபரின் உடல்திறன் அவர் தாக்கும் விசை ஆயுதத்தின் கூர்மைத்தன்மை, விசைத்தன்மை ஆகியவற்றினை பொருத்து மேற்கண்ட காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் கு.வி.**

என்னென்ன காயங்கள் பின்புறமாக இருந்து தாக்கினால் ஏற்பட வாய்புள்ளது என்றால் 1வது காயம் தவிர மற்ற அனைத்தும் பின்னால் இருந்து ஏற்பட வாய்ப்புள்ளது. 1வது காயம் பின்னால் இருந்து இடது புறம் தாக்கியிருந்தால் ஏற்பட வாய்ப்புள்ளது. 1, 2, 4, 5 காயங்கள் அவ்வாறு ஏற்பட வாய்ப்புள்ளது. அந்த காயங்கள் எங்கு துவங்கி எங்கு முடிகிறது என்று குறிப்பாக கூற முடியாது. ஏனென்றால் அது தையலிடப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்ட பின்னர் காணப்பட்ட காயம் ஆகும். நான் சடலக்கூராய்வு செய்யும்போது ஆயுதத்தை பார்த்தேன். அந்த சடலக்கூராய்வு அன்றே

ஆய்வாளரிடம் கூறினேன். அதன்பின்னர் என்னை ஆய்வாளர் ஆயுதத்தை காட்டி கேட்கவில்லை. ஆய்வாளரிடம் சடலக்கூராய்வு அன்றே ஆயுதத்தினால் ஏற்பட வாய்ப்புள்ளது என்று ஆய்வாளர் வாக்குமூலத்தில் நான் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நான் இன்றுதான் முதன்முதலாக ஆயுதத்தை பார்த்ததாகவும் அதனடிப்படையில் கருத்துரை வழங்கியதாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் புலனாய்வு அலுவலரின் விசாரணையின்போது இந்த விவரங்களை கூறவில்லை என்றால் சரியல்ல. நான் உண்மைக்கு மாறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.07.03 18:23:11 +0530